**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**முன்னிலை: திரு. எம்.தனபால், பி.ஏ.,பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்.**

**2023−ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A.No.219/2023**

**in**

**Original Suit No.763/2022**

**(CNR No.TNDG19-0003111-2022)**

**----**

அ. கோவிந்தசாமி ...... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. எம். சுப்பிரமணி

2. கந்தசாமி

3. கிளை மேலாளர்,

கனரா வங்கி, கீரனூர் கிளை

...... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.763/2022−இல் இ.ம.எண்.219/2023 ஆக கடந்த 20.03.2023 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னர் கடந்த **24.08.2023**−ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.டி.இளங்கோ அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.கல்யாணசுந்தரம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கலான,

**உத்தரவு**

**1.** வாதியாகிய 1வது சாட்சியின் செவிகேட்புத்திறன் குறைபாடுள்ள

நிலையில் அவருடைய சாட்சியத்தை நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து அவரது முதல்விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை சாட்சியத்தை பதிவு செய்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து உத்தரவிட கோரி இந்த மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26, விதி 1 முதல் 3 மற்றும் பிரிவு 151–இன் கீழ் மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம். :–**

மனுதாரர், அசல்வழக்கில் வாதி எனவும், தனக்கு சாட்சியமளிக்க செவிகேட்புத்திறன் குறைபாடு கணிசமாக உள்ளதால் சாதாரண நிலையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பக்கம் தனது சாட்சியத்தை குறுக்குவிசாரணை மேற்கொள்ளும்பட்சம் தன்னால் அவைகளை புரிந்துகொண்டு சரியானபடி பதில் அளிப்பது சாதாரண நிலையில் சாத்தியமில்லாததாக இருக்கிறது என்றும், தனக்கு செவி கேட்புத்திறன் குறைபாடு மிகுந்துள்ளதால் இந்த வழக்கில் தனது சாட்சியத்தினை சமூகம் நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் ஒருவரை நியமனம் செய்து அவர் மூலம் எதிர்மனுதாரர்கள்தரப்பு வழக்கறிஞர்கள் தன்னை நீதிமன்றத்திற்கு வெளியில் தனது வழக்கறிஞர் அலுவலகத்தில் ஆணையர் மூலம் சாட்சி விசாரணை அறிக்கையினை பெற்று பதிவு செய்து கொள்வதற்கு எதிர்மனுதாரர்கள் சட்டப்படியும், நியாயப்படியும் ஆட்சேபனையும் இருக்கத்தக்கதல்ல என்றும், அல்லாதபட்சம் தனது சாட்சியத்தை முறையாக பதிவு செய்து கொள்ள இயலாமல் தனது வழக்கு வாதத்தை நிரூபிக்க இயலாமல் தனக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட, நஷ்டங்களும் சொத்து இழப்பும் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே வாதியாகிய 1வது சாட்சியின் முதல்விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை சாட்சியத்தை பதிவு செய்து அறிக்கை தாக்கல் செய்ய

நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து உத்தரவிட வேண்டி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3. 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1 ஆம் எதிர்மனுதாரரால் தழுவி ஏற்றுக்கொள்வதாக மேற்குறிப்பு செய்யப்பட்ட எதிர்மனு உரையின் சுருக்கம்:</u>**

இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல மற்றும் நிலைக்கத்தக்கதல்ல எனவும், மனுதாரரே அவருக்கு செவி கேட்கும் திறன் குறைபாடு மிகுந்துள்ளது என்றும், தனது இயலாமையே மாண்பமை நீதிமன்றத்திற்கு அபிடவிட்டு மூலம் தெரிவித்துவிட்ட நிலையில் மனுதாரரே நீதிமன்றத்திற்கு வெளியில் விசாரணை செய்ய இயலாது என்றும், செவி கேட்புத்திறன் குறைபாடு உள்ள நபர்களிடம் மேற்படி துறையில் கற்றறிந்த நபர்களால் மட்டுமே அவர்கள் சொல்லும் பாசையினை அறிந்துகொள்ள இயலமூ என்றும், அதற்கு மனுதாரரும் படித்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு படிப்பறிவு உள்ளதாக மனுதாரர் தனது மனுவில் குறிப்பிடாத நிலையில் மனுதாரரை நீதிமன்றத்திற்கு வெளியே விசாரணை செய்ய இயலாது என்றும், மனுதாரரின் செவி கேட்புத்திறன் குறைபாடு உள்ள நிலையில் அவர் வழக்கு விசாரணைக்கு ஒத்துழைக்க இயலாது என்பதை தெளிவாக குறிப்பிட்டுள்ளார் என்றும், மனுதாரர் அசல்வழக்கினை இழுத்தடித்து காலம் கடத்திட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்து உத்தரவாக வேண்டும் என்று தெரிவித்து எதிர்மனு உரை தாக்கல் செய்துள்ளார்.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**<u>6. பிரச்சனைக்குரிய தீர்வு :–</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரருக்கு செவி கேட்புத்திறன் குறைபாடு கணிசமாமக உள்ளதால் சாதாரண நிலையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்பக்கம் தனது சாட்சியத்தை குறுக்குவிசாரணை மேற்கொள்ளும்பட்சத்தில் தன்னால் அவைகளை புரிந்து கொண்டு சரியானபடி பதில் அளிப்பது என்பது சாதாரண நிலையில் சாத்தியமில்லாததாக உள்ளதாகவும், மனுதாரரின் செவி கேட்புத்திறன் குறைபாடு மிகுந்துள்ளதால் அசல்வழக்கில் தனது சாட்சியத்தினை சமூகம் நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் ஒருவரை நியமனம் செய்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் தன்னை நீதிமன்றத்திற்கு வெளியில் தனது வழக்கறிஞர் அலுவலகத்தில் ஆணையர் மூலம் சாட்சி விசாரணை தனது வழக்கறிஞர் அலுவலகத்தில் ஆணையர் மூலம் சாட்சி விசாரணை அறிக்கையினை பெற்று பதிவு செய்து கொள்வதற்கு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு சட்டப்படியும், நியாயப்படியும், ஆட்சேபனையும் இல்லை என்றும், அல்லாதபட்சம் தனது சாட்சியத்தினை முறையாக பதிவு செய்துகொள்ள இயலாமல் தனது தாவா வாதத்தை நிரூபிக்க இயலாமல் போய்விடும் என்றும், எனவே தனது சாட்சியத்தை பதிவு செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து நீதிமன்றத்திற்கு வெளியில் மனுதாரர் வழக்கறிஞர் அலுவலகத்தில் விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்து உத்தரவிட வேண்டி இந்த மனுத்தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்து வாதியின் தாயார் தெய்வாணையம்மாளுக்கு பாத்தியப்பட்டு, அவரது சுவாதீனத்தில் இருந்து வந்துள்ளது. தெய்வாணையம்மாள் விவசாய செலவிற்கும், குடும்ப

செலவிற்கும், பணம் இல்லாமலும், வருமானம் இல்லாமலும் இருந்து சில நபர்களிடம் கடன் பெற்று, கடன்கள் தீர்க்கப்பட்டு எதிர்மனுதாரருக்கு மறுபயனுக்கு 14.09.2004 ஆம் தேதி தனக்கு கிரையம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள விபரம் தவறானது என்றும், மனுதாரருக்கு சாட்சியமளிக்க செவிகேட்புத்திறன் குறைபாடு கணிசமாக உள்ளதால் சாதாரணமான நிலையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பக்கம் தனது சாட்சியத்தை குறுக்குவிசாரணை மேற்கொள்ளும்பட்சம் தன்னால் அவைகளை புரிந்துகொண்டு சரியான நிலையில் பதில் அளிப்பது சாதாரண நிலையில் சாத்தியமில்லாததாக இருக்கிறது என்றும், மனுதாரருக்கு செவிகேட்புத்திறன் குறைபாடு மிகுந்துள்ளதால் அசல்வழக்கில் தனது சாட்சியத்தை சமூகம் நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் ஒருவரை நியமனம் செய்து மனுதாரரின் சாட்சியத்தை பதிவு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியுள்ளார் என்றும், மனுதாரருக்கு செவி கேட்கும் திறன் குறைபாடு மிகுந்துள்ளது என்று தனது இயலாமையை மாண்பமை நீதிமன்றத்திற்கு அபிடவிட்டு மூலம் தெரிவித்துவிட்டநிலையில் மனுதாரரை நீதிமன்றத்திற்கு வெளியில் விசாரணை செய்ய இயலாது என்றும், செவி கேட்புத்திறன் குறைபாடு உள்ள நபர்களிடம் மேற்படி துறையில் நிபுணத்துவம் பெற்ற நபர்களால் மட்டுமே அவர்கள் சொல்லும் பாசையினை அறிந்துகொள்ள இயலும் என்றும், மனுதாரர் அசல்வழக்கினை இழுத்தடித்து காலம் கடத்துவதற்காகவே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவாக வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**8.** இந்நிலையில் இவ்வழக்கு கோப்பினை பரிசீலிக்கையில் வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்துக்கள் தனித்து பாத்தியப்பட்டது என்று

விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல்வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டு வாதி தரப்பில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு பிரதிவாதிகள்தரப்பு குறுக்குவிசாரணைக்கு அசல்வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரருக்கு காதுகேட்புத்திறன் குறைவாக இருப்பதாகவும், தன்னை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை மேற்கொள்ளும்பட்சம் தன்னால் அவைகளை புரிந்துகொண்டு சரியானபடி பதில் அளிப்பது சாதாரண நிலையில் சாத்தியமில்லாததாக உள்ளதாகவும், மனுதாரருக்கு செவிகேட்புத்திறன் குறைபாடு மிகுந்துள்ளதால் அசல்வழக்கில் தனது சாட்சியத்தினை நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் ஒருவரை நியமனம் செய்து அதன்மூலம் எதிர்மனுதாரர்கள்தரப்பு வழக்கறிஞர்கள் தன்னை நீதிமன்றத்திற்கு வெளியில், மனுதாரர்தரப்பு வழக்கறிஞர் அலுவலகத்தில் ஆணையர் மூலம் சாட்சி விசாரணை அறிக்கையினை பெற்று பதிவு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்று கூறியுள்ளார். இருப்பினும், மனுதாரர் தனக்கு செவி கேட்புத்திறன் குறைபாடு உள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் தன்னை குறுக்குவிசாரணை செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து உத்தரவிட வேண்டும் என்றும், வா.சா.1–யை நீதிமன்றத்திற்கு வெளியே வைத்து குறுக்குவிசாரணை செய்து குறுக்குவிசாரணை சாட்சியத்தை பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள காரணத்தை பரிசீலிக்கையில் மனுதாரரை காதுகோளாதோர்களிடம் பேசுவது சம்பந்தமாக சிறப்பு நிபுணத்துவம் பெற்றவரால்தான் விசாரணை செய்ய இயலும் என்றும், மனுதாரர், அசல்வழக்கினை இழுத்தடித்து காலம் கடத்துவதற்காகவே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்ற எதிர்மனுதாரர்தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளும்வகையில் உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர் மனுவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று

இந்நீதிமன்றம் தீர்மானித்து இவ்வாறு மேற்கண்ட பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடையளிக்கின்றது.

**9.** இறுதியாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2023–ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 22 ஆம் நாள்** என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2023.09.22 17:39:49 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.

**<u>10. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள் – இல்லை</u>**

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2023.09.22 17:39:53 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

I.A.No.219/2023 in
O.S.No.763/2022
Sub Court, Oddanchatram.
22.09.2023
Order (Fair/Draft)